## தலைப்பு 18 – பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்திற்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இகநி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை

திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடாவின் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் 2021 நவம்பர் 26 ஆந் திகதி வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விடுபட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வழிகாட்டியின் 7.9 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் காலப்பகுதியின் இறுதியில் நிறுவனத்தினால் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாத போதிலும் நிறுவனத்தினால் ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட ரூபா 7,183 ஆன தொகை நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிக்காலப்பகுதியின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட காசு மீதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாதிருப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 123,139,364 ஆன கட்டுநிதி நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 123,093,000 ஆக ரூபா 46,364 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியின் அச்சீடு (SA-70) பிரகாரமும் மீளாய்வாண்டினுள் கிடைத்திருந்த கட்டுநிதியின் அளவு ரூபா 123,093,000 ஆகும். எஞ்சிய ரூபா 46,364 உடைந்த பொருட்களை ஏலமிடல், பழைய பத்திரிகைகளை விற்பனை செய்தல் போன்ற ஏனைய பெறுவனவுகளாவதுடன் இத்திணைக்களம் B தரத்தின் கீழ் கொள்ளப்படுவதால் அந்தப் பெறுவனவுகளும் அரசின் வருமானக் குறியீட்டின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முற்பணக் கணக்கிற்கு (ஏசீஏ-5) பிரகாரம் ஆண்டினுள் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 2,769,649 ஆன போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 2,617,330 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 152,319 ஆன வேறுபாடொன்று நிலவியது. | மேற்படி (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 135,100 ஆன பதிவினை திருத்துதல் மற்றும் தவறுதலாக 2019 ஆண்டினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 17,219 ஆன கடன் வட்டித் தொகை திருத்தப்பட்டமையால் இவ்வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வழிகாட்டல்களுக்கு இணங்க பெறுமதிகள் இணக்கம் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். |
| (ii) | முற்பணக் கணக்கிற்கு (ஏசீஏ-5) இணங்க ஆண்டினுள்ளான முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,135,510 ஆன போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 2,852,910 ஆக காண்பிக்கப்பட்டிருந்த மையால் ரூபா 282,600 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | ACA-5 திறைசேரியின் கணனி அச்சீட்டு (பொழிப்பு) பிரகாரம் சீராக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. திறைசேரியினால் 2020 திசெம்பர் மாதத்திற்காக உள்ளடக்கப்படாத ரூபா 147,500 ஆன தொகை மற்றும் 2021 ஆம் ஆண்டினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 135,000 ஆன தொகை காரணமாக இந்த ரூபா 282,600 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வழிகாட்டல்களுக்கு இணங்க பெறுமதிகள் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | செலவினங்களை சரியாக மதிப்பீடு |

| | | |
|---|---|---|
| பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 127(5) பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் செலவினம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 09 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக 40 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன் செலவின விடயம் 01-1202 இன் ஆரம்ப செலவின மதிப்பீடு ஆண்டின் இறுதியில் 123 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. | | செய்து வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 திட்டமிடுதல்**

---------------------

**3.1.1 பெறுகைகள் திட்டம்**

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்க வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் மூலதன - 2102 மற்றும் மீண்டெழும் - 1201 செலவின விடயங்களின் வருடாந்த மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 1,100,000 இனால் விஞ்சி பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | பதவிக்காக புதிய அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு காணப்படல் மற்றும் ஆளுங்கட்சியின் 159 அமைச்சர்களின் கடமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பணிகளை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் புதிய நியதிச்சட்டங்கள் விதிக்கப்படும் போதும், ஆளுங்கட்சியின் அமைச்சர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளும் போதும் குறித்த | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் ஆண்டின் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணிப்பொறுப்பானது இந்த நிறுவனத்தின் அலுவலகத்திற்கு புதிதாக சாட்டப்பட்டுள்ளமையால் இந்த எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகளுக்காக ரூபா 02 மில்லியனான தொகை செலவிடப்படுவதாக எதிர்பார்க்கப்பட்டமையால் இத்தொகை பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. | |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தின் வருடாந்த வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொருத்தமான இடமொன்றை கண்டறிவதற்கு 02 சந்தர்ப்பங்களில் 812 கிலோ மீற்றர்கள் கொழும்பிலிருந்து வெளியே பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் எரிபொருளுக்காக ரூபா 15,890 செலவிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அந்தப் பிரதேசங்களில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்கு முன்னர் களப்பரிசோதனைக்கு செல்லும் போது எரிபொருளுக்காக ரூபா 15,890 ஆன தொகை செலவிடப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய நிலைமையின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் பயிற்சி செயலமர்வுகளை இடைநிறுத்துவதற்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தமையால் குறித்த பயிற்சி செயலமர்வுகளை நடாத்த முடியாதிருந்தது. | உற்பத்தி திறன் தொடர்பில் கருத்திற் கொண்டு பின்னர் தீர்மானம் எடுப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும். |

## 04. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் வகுப்பின் பிரகாரம் இனங்காணப்பட்ட திறன்களை இலக்கிட்டு குறித்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொருட்டு உரிய இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கடந்த வருடத்தின் முதல் 03 காலாண்டினுள் கொரோனா தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதிருந்தது எவ்வாறான போதிலும் இறுதிக் காலாண்டில் அனைத்து உத்தியோகத்தர் களையும் உள்ளடக்கும் வகையில் திறன்களை இலக்கிட்டு அடைந்து கொள்ளும் பொருட்டு 04 இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் குறிப்பிடப்படும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்த பதவியணிக்காக செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |